மின்னிதழ்
# தேசியம்
THESIYAM தேசியம்
www.thesiyamnews.com

WELLA
WELLA HAIR DRESSING
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

குரல் - 89 | 21.06.2023 (புதன்கிழமை) | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 7 | ஊக்குவிப்பு : ரூ.30.00

# இலங்கையில் தமிழர்களிற்கு எதிராக தொடரும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை

## அவுஸ்திரேலிய செனெட்டர் கண்டனம்!!



தமிழ் மக்களிற்கு சுயநிர்ணய உரிமைக்குள்ள உள்ள உரிமை பாதுகாப்பு மற்றும் சமாதானத்திற்கு கிறீன்ஸ் கட்சி ஆதரவளிக்கின்றது என கட்சியின் செனெட்டர் டேவிட் சூபிரிட்ஜ் தெரிவித்துள்ளார்
நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையில் அவர் தெரிவித்துள்ளார்.
இன்று நான் தமிழ் மக்களிற்கு ஆதரவை தெரிவிக்க விரும்புகின்றேன் தமிழ் அகதிகள் பேரவையின் அலுவலகத்தை திறந்துவைக்கும் நிகழ்விற்கு என்னை அவர்கள் அழைத்தது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.
தமிழ் அகதிகள் பேரவை தமிழ் அகதிகளிற்கு தனிப்பட்ட ஆலோசனைகளை வழங்குதல் கல்வி தொடர்பான உதவிகளை வழங்குதல் அகதிகள் தொடர்பான

பக்கம் 04

# போராட்டங்கள் தமிழர்களின் உரிமைக்கானவை!

## எல்லாவல மேத்தானந்த தேருக்கு ஸ்ரீநேசன் பதிலடி

அஹிம்சை வழி, ஆயுத வழி போராட்டங்கள் தமிழர்களின் உரிமைக்கானவை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் நேற்று (20)

பக்கம் 04

# குருந்தூர் மலை விவகாரம்:

## ரணிலின் முடிவுக்கு கஜேந்திரன் எம்.பி கண்டனம்..!

முல்லைத்தீவு குருந்தூர்மலைப் பகுதியிலுள்ள காணிகள் சிங்களவர்களுக்கு சொந்தமானது என பேராசிரியர் எல்லாவல மேதானந்த தேரர் எழுதிய கடிதத்தை அதிபர் ரணில் விக்ரமசிங்க ஆமோதித்துள்ளார்.
இந்த விடயம் குறித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் நாடாளுமன்றத்தில்

பக்கம் 04

# செஞ்சோலைப் படுகொலைக்கு விமானம் வழங்கியது உக்ரைன் அரசாங்கமே! தமிழர்களின் வலி இப்போது தெரிகின்றதா..??



பக்கம் 04

இலங்கையில் 30 ஆண்டுகளாக நிகழ்ந்த உள்நாட்டு யுத்ததில், பாரிய அவலங்களை எதிர்கொண்ட தமிழினம்,
அதன் வலிகளை சுமந்து, வடுக்கள் நிரம்பிய அனுபவங்களை கொண்டுள்ளதன் அடிப்படையில்,
உக்ரைன் நாட்டு மக்களின் வலிகளையும் உணரக் கூடியதாக உள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கவலை வெளியிட்டிருந்தார்.
நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது உக்ரைன் நாட்டில் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் அவலநிலைகள் தொடர்பாக குறிப்பிடும் போது இவ்வாறு கவலை வெளியிட்டிருந்தார்.
உலக சமாதானத்துக்காக, உக்ரைன் மீதான ஆக்கிரமிப்புப் போரை ரஸ்ய அரசாங்கம் நிறுத்த வேண்டும்.

# விடுதலைப்புலிகளின் தலைவரின் பிரேத பரிசோதனை அறிக்கையை வழங்க பாதுகாப்பு அமைச்சு மறுப்பு



தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவரின் பிரேத பரிசோதனை அறிக்கையை வழங்க பாதுகாப்பு அமைச்சு மறுப்பு தெரிவித்துள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவரின் பிரேத பரிசோதனை அறிக்கையை வழங்குவது தேசியப்பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனவும் தெரிவித்துள்ளது.
2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், தகவலறியும் உரிமைச்

பக்கம் 04

# ஏழை விவசாயிகளது வாழ்வாதாரத்தையே அரசு கவனத்திலெடுக்க வேண்டும்!

## கோவிந்தன் கருணாகரம் எம்.பி கோரிக்கை!!



பக்கம் 04

நெல் விலை நிர்ணயத்தில், அரிசி ஆலை உரிமையாளர்கள் அழுத்தம் ஆலோசனைகளைக் கருத்தில் கொள்ளாது ஏழை விவசாயிகளின் வாழ்வாதாரத்தினை அரசாங்கம் கவனத்திலெடுக்க வேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா)

# நாட்டை மீட்க சம்பந்தன், மனோ கட்சிகளின் ஆதரவு அவசியம்! வஜிர சுட்டிக்காட்டு



பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணி உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளினதும் ஆதரவு மிக முக்கியம் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

பக்கம் 04

# சே குவேரா எனும் புரட்சிமுகம் !

## எக்காலமும் முகிழும் வீரத்தின் வித்து !!

## எவ்வா யுகங்களிலும் ஒளிரும் விடிவெள்ளி !!!

**மக்களின் விடிவிற்காக :**

இலத்தீன் அமெரிக்க மக்களின் விடிவிற்காக ஒரு புரட்சி வீரனின் இறுதிக்கணங்கள் இங்கே தான் எழுதப்படப் போகிறது என்பதை யாருமே அறியவில்லை.



1966ம் ஆண்டு மார்ச் மாதம் காங்கோவை விட்டு வெளியேறும் சூழ்நிலை ஏற்பட்டதன் பின்னர் மார்ச் முதல் ஜூன் வரையிலான கால கட்டத்தில் உருகுவே, பிரேஸில், பராகுவே, அர்ஜெண்டைனா, பொலிவியா நாடுகளில் பயணம் செய்தார் அந்த புரட்சியின் ஒளிர்முகம்.

1966ம் ஆண்டின் கடைசிகளில் கொரில்லாப் போரை வழி நடத்தும் பொருட்டு பொலிவியா நாட்டுக்குள் நுழைந்த அந்த மாவீரன் அங்கு நிலவிய சமூக மற்றும் பொருளாதார நிலைகளும் எந்நேரமும் அங்கு புரட்சி வெடிக்க சாதகமாக இருந்தது . அத்துடன் பொலிவியா ஐந்து பிற நாடுகளுடன் தன் எல்லையை பகிர்ந்து கொண்டிருந்தது .

பொலிவியாவில் கொரில்லாப் போராட்டம் வெற்றி பெறுமேயானால் அதை மற்ற ஐந்து நாடுகளுக்கும் பரவச் செய்துவிடலாம் என்றே அவர் நினைத்தார்.

**பொலிவியாவில் புரட்சி :**

எதற்காக பொலிவியா நாட்டைத் தேர்ந்தெடுத்தார் என்றால், அமெரிக்கா பொலிவியாவை விட கரிப்பியன் தீவு நாடுகளே தங்கள் பாதுகாப்பிற்கு பங்கம் விளைவிக்கக்கூடும் என்று நம்பியதும், அதனால் அமெரிக்காவின் பார்வை பொலிவியா மீது அவ்வளவு தீர்க்கமாக விழவில்லை என்பதும் ஒரு காரணமாகும்.

பொலிவியாவில் நடந்த கொரில்லாப் புரட்சியின் போது பொலிவியக் காடுகளில் நீண்ட காலமாக மக்களோடு மக்களாக பதுங்கி இருந்து மக்களுக்காக மரணத்தை மகிழ்வோடு ஏற்ற மாவீரனே 'சே குவாரா' !

மிகுந்த மனவேதனையுடன் ஆஸ்துமாவும் சேர்ந்து 'சே'யை வாட்டி வதைத்தது. போதிய வீரர்கள் இல்லாதது மற்றும் உணவின்மை போன்ற பிரச்னைகளுடன் 'சே' காடுகளில் அலைந்தார். சேயை தேடித் திரிந்த சி.ஐ.ஏ. ஏற்கனவே பொலிவியாவுக்குள்ளும் புகுந்து விட்டது.

> **“ ஒரு மாவீரனின் இறுதி மூச்சுக்கான வரலாறு எழுதப்பட தயாராகி கொண்டிருக்கின்றது என்பதை எவருமே அறிந்திருக்க வாய்ப்பில்லை. ”**

புரட்சியாளர்கள் புதைக்கப்படுவதில்லை விதைக்கப்படுகின்றார்கள் எனும் சே குவேராவின் கூற்றுக்கிணங்க மக்களின் நலனுக்காக தன்னையே தியாகித்த வீரன் தான் சே குவாரா.

இப்பூமிப் பந்தில் பலர் உதிக்குன்றனர், பலர் மறைகின்றனர். ஆயினும் ஒருசிலரே இன்று வரை நீடித்து நிலைத்து சாதனை படைக்கிறார்கள். அந்தவகையில் வரலாற்றின் பொன் எழுத்துக்களால் பதிக்கப்பட்ட பெயரில் ஒன்றே சே குவேரா.

**மருத்துவ பட்டதாரி :**


1928 ஜூன் 14இல் ஆர்ஜென்டீனா, ரொசாரியோவின் செல்வந்த குடும்பத்தில் பிறந்து, ஒரு மருத்துவராக பட்டம் பெற்ற இவர் நினைத்திரு ந்தால் தன் காலம் முழுவதும் வசதியான வாழ் க் கையை மேற்கொண்டிருக்க முடியும்.

ஆனால் அனைத்தையும் துறந்து ஒடுக்கப்பட்ட மக்களுக்காக அதுவும் வேறு நாட்டு மக்களுக்காக போராடிய இவரது போராட்டம் அளப்பரிய ஒன்றாகும்.

பூமியின் நடுவினில் ஆழப்பதிந்த பெயர் பெற்ற சேகுவாரா தனது இறுதிக்கணங்கள் கூட ஒரு பரட்சி வீரனின் உன்னத தியாகத்தை உலகறியச் செயத்து.

**'சே'யின் இறுதிக் கணங்கள் :**

1967 அக்டோபர் 8 தென் அமெரிக்கச் சரித்திரத்தில் ஓர் இருண்ட தினம்.
காலை 10.30 யூரோ கணவாயை ஆறு கெரில்லா வீரர்களுடன் 'சே' கடந்து செல்கிறார். வழி யில் தென்பட்ட ஆடு மேய்க்கும் குண்டுப் பெண் ணின் மேல் பரிதாபப்பட்டு ஐம்பது பெஸோக் களை பரிசாகத் தருகிறார்.



நண்பகல் 1.30 அந்தக் குண்டுப் பெண் பொலிவிய ராணுவத்துக்கு 'சே'வின் இருப்பிடத்தைக்



காட்டிக் கொடுக்கிறாள். அலறிப் புடைத்துப் பறந்து வந்த பொலிவிய ராணுவம் சுற்றி வளைத்துச் சரமாரியாகச் சுடத் தொடங்குகிறது. பதிலுக்கு கெரில்லாக்களும் துப்பாக்கியால் சுடகின்றனர்.

பிற்பகல் 3.30 காலில் குண்டடிபட்ட நிலையில், தன்னைச் சுற்றித் துப்பாக்கியுடன் சூழ்ந்த பொலிவிய ராணுவத்திடம், “நான்தான் 'சே'. நான்இறப்பதைக் காட்டிலும், உயிருடன் பிடிப்பது உங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும்” என்கிறார்.

காலில் குண்டு அடிபட்ட நிலையில் சே குவேரா மாலை 5.30அருகிலிருந்தலா ஹிகுவேராவுக்கு வீரர்கள் கைத்தாங்கலாக சேவை அழைத்து வருகின்றனர்.

அங்கிருக்கும் பழைய பள்ளிக்கூடம் ஒன்றில் 'சே' கைகால்கள் கட்டப்பட்ட நிலையில் சிறை வைக்கப்படுகிறார்.
இரவு 7.00 'சே பிடிபட்டார்' என சி.ஐ.ஏவுக்குத் தகவல் பறக்கிறது.. அதே சமயம், 'சே' உயிருடன் இருக்கும் போதே இறந்துவிட்டதாகப் பொய்யான தகவல் பொலிவிய ராணுவத்தால் பரப்பப்படுகிறது.

தனக்கு உணவு வழங்க வந்த பள்ளி ஆசிரியையிடம், “இது என்ன இடம்?” என்று 'சே' கேட்கிறார். பள்ளிக்கூடம் என அந்தப் பெண் கூற, “பள்ளிக்கூடமா” ஏன் இத்தனை அழுக்காக இருக்கிறது?” என வருத்தப்படுகிறார். சாவின் விளிம்பிலும் 'சே'வின் இதயத்தை எண்ணி அப்பெண் வியந்து போகிறார்.
அக்டோபர் 9 அதிகாலை 6.00 லாஹி குவெராவின் பள்ளிக்கூட வளாகத்தில் ஒரு ஹெலிகாப்டர் வட்டமடித்தபடி வந்து இறங்குகிறது. அதிலிருந்து சக்திவாய்ந்த ரேடியோ மற்றும் கேமராக்களுடன் ஃபெலிக்ஸ் ரோட்ரிக்ஸ் எனும் சி.ஐ.ஏ. உளவாளி இறங்குகிறார்.

பிடிபட்டிருப்பது 'சே'தான் என அமெரிக்காவுக்குத் தகவல் பறக்கிறது. 'சே'வின் டைரிகள் மற்றும் உடைமைகள் கைப்பற்றப்படுகின்றன. தான் கொண்டுவந்த கேமராவில் 'சே'வை பல கோணங்களில் புகைப் படங்கள் எடுக்கிறார் ஃபெலிக்ஸ். கைவிடப்பட்ட ஏசு கிறிஸ்துவைப் போலக் காட்சி தரும் 'சே'வின் அப்புகைப்படங்கள் இன்றளவும் வரலாற்றின் மிச்சங்கள்.

கசங்கிய பச்சைக் காகிதம் போல கைகால்கள் கட்டப்பட்ட நிலையில், அழுக்கடைந்த ஆடைகளுடன் 'சே'வைப் பார்த்ததும், அவருக்கு அதிர்ச்சி.

### அமெரிக்காவுக்கு சிம்ம சொப்பனமான மாவீரன் :

அமெரிக்காவுக்குச் சிம்ம சொப்பனமாக இருந்த ஒரு மாவீரனா இந்தக் கோலத்தில் இங்கே நாம் காண்பது என அவருக்கு வியப்பும் திகைப்பும்! பிடிபட்டிருப்பது 'சே'தான் என அமெரிக்காவுக்குத் தகவல் பறக் கிறது. 'சே'வின் டைரிகள் மற்றும் உடைமைகள் கைப்பற்றப்படுகின்றன.



தான் கொண்டுவந்த கேமராவில் 'சே'வை பல கோணங்களில் புகைப் படங்கள் எடுக்கிறார் ஃபெலிக்ஸ். கைவிடப்பட்ட ஏசு கிறிஸ்துவைப் போலக் காட்சி தரும் 'சே'வின் அப் புகைப் படங்கள் இன்றளவும் வரலாற்றின் மிச்சங்கள்.

காலை 10.00 'சே'வை உயிருடன் வைத்துக் கொண்டு விசாரணை நடத்தினால், அது உலகம் முழுக்க அவர் மேல் பரிதாபத்தையும், நாயகத் தன்மையையும் உருவாக்கிவிடும் என்பதால், அவரை உடனடியாகத் தீர்த்துக்கட்டி விடுவதுதான் சரி என சி.ஐ.ஏவிடம் இருந்து தகவல் வருகிறது.

காலை 11.00 'சே'வைச் சுட்டுக் கொல்வது என முடிவெடுக்கப்படுகிறது. யார் அதைச் செய்வது எனக் கேள்வி வருகிறது. 'மரியோ ஜேமி' (Mario Jemy) என்னும் பொலிவிய ராணுவ சர்ஜன் அக்காரியத்துக்காகப் பணியமர்த்தப்படுகிறார்.

மரியோ ஜேமி' (Mario Jemy) கைகள் கட்டப்பட்ட நிலையில், 'சே'வை பள்ளிக்கூடத்தின் மற்றொரு தனியிடத்துக்கு மரியோ அழைத்துச் செல்கிறார். "முட்டி போட்டு உயிர் வாழ்வதை விட நின்று கொண்டே சாவது எவ்வளவோ மேல்!" என்பார் 'சே'. ஆனால், மரியோ அவரை ஒரு கோழையைப் போலக் கொல்லத் தயாராகிறார்.

### வீரனாய் வீழ்ந்த சே :

தன்னை நிற்க வைத்துச் சுடுமாறு 'சே' கேட்க, அதை அலட்சியப்படுத்துகிறார். "கோழையே, சுடு! நீ சுடுவது 'சே'வை அல்ல ஒரு சாதாரண மனிதனைத்தான்!" இதயம் கிழிக்கும் விழிகள் மின்ன, உலகம் புகழும் மனிதன் சொன்ன கடைசி வாசகம் இதுதான்!

மணி 1.10 மனித குல விடுதலைக்காகத் தன் வாழ்நாளெல்லாம் போராடிய மாமனிதனை நோக்கி துப்பாக்கி குண்டுகள் பாய்கின்றது. ஒன்பது தோட்டாக்களில் ஒன்று, அவரது இதயத்துக்குள் ஊடுருவியது. இனம், மொழி, தேசம் என எல்லைகள் கடந்து பாடுபட்ட உலகின் ஒரே வீரன் இதோ விடை பெறுகிறான்.

சேவின் மார்புகளைத் தோட்டாக்களால் துளைத்தது. ஆனால் அந்த வீரனின் கண் இமைகள் அப்போதுகூட மூடிக்கொள்ளவில்லை. கண்கள் திறந்தபடியேதான் அவர் உயிர் அவரை விட்டுப் பிரிந்தது.




எந்த மண்ணிலோ பிறந்து எந்த மண்ணிற்காகவோ போராடி எந்த மண்ணிலோ துணிச்சலாக மரணத்தை சந்தித்த சே குவேரா இந்த யுகத்தின் ஒப்பற்ற தலைசிறந்த விடுதலைப் போராளி. எக்காலமும் முகிழும் வீரத்தின் வித்தான சே குவேரா, எல்லா யுகங்களிலும் ஒளிரும் புரட்சிமுகமானார்.

- ஐங்கரன் விக்கினேஸ்வரா -

## சாவகச்சேரி மக்களின் குடிநீர் பிரச்சினை!
## அமைச்சர் டக்ளஸ் எடுத்துள்ள நடவடிக்கை!!

சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள நல்ல தண்ணீர் கிணற்றை சுத்திகரித்து பிரதேச மக்களுக்கும் பயணிகளுக்கும் வகையில் குடிநீர் வழங்குவது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்மந்தப்பட் அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளார்.

குறித்த விடயம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் அந்த பகுதிக்கு சென்று நிலமைகளை நேரடியாக பார்வையிட்டுள்ளார்.

நேற்று (20.06.2023) சம்மந்தப்பட் தொல்லியல் திணைக்கள அதிகாரிகளை வரவழைத்து குறித்த விடயம் தொடர்பாக கலந்துரையாடியுள்ளார்.

நல்ல தண்ணீர் கிணறு சோழர்களினால் அமைக்கப்பட்ட சிவன் கோயிலின் மூலஸ்தானத்திற்கான தீர்த்தக் கிணறு என்பது ஆய்வு ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டமையினால் தொல்லியல் திணைக்களத்தினால் பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில், அமைச்சருடனான சந்திப்பின் போது, அந்த கிணற்றின் கட்டுமானங்களில் பாதிப்பை ஏற்படுத்தாமல் மக்களுக்கான குடி நீரை வழங்குவதற்கு தொல்லியல் திணைக்களத்தினர் சம்மதம் தெரிவித்துள்ளனர்.



குறித்த கலந்துரையாடலில், தொல்லியல் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் (யாழ்ப்பாணம்) பந்துல ஜீவ, புனர்நிர்மாணப் பொறுப்பதிகாரி ராகினி மற்றும் மேலாய்வு உத்தியோகஸ்தர் தஷிந்தன் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

## யாழ். புங்குடுதீவில் 500 தூண்களுடன்
## பிரமாண்டமாக கட்டுப்பட்டுள்ள ஆலயம்





இலங்கையின் வடக்கே அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயமாக யாழ்ப்பாணம் புங்குடுதீவு கண்ணகி அம்மன் ஆலயம் உள்ளது.

இதன்படி குறித்த ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 25ம் திகதி நடைபெற உள்ள நிலையில், தற்போது அதற்கான கிரியைகள் பக்தி பூர்வமாக ஆரம்பமாகியுள்ளன.

5 இராஜகோபுரங்களுடன் 500 தூண்களுடன் பிரமாண்டமாக கட்டப்பட்டுள்ள அழகிய ஆலயமாக புங்குடுதீவு கண்ணகி அம்மன் ஆலயம் வர்ணிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் கண்ணகி அம்மன் என வழங்கும் ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலய திருக்குடமுழுக்கு விழா எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை அன்று இடம்பெறவுள்ளது.

# தொலைத்தொடர்பு கோபுரம் அமைக்க வேண்டாம்!
# யாழ் ஏழாலை மக்கள் கோரிக்கை!

தமது பிரதேசத்தில் தொலைத்தொடர்பு கோபுரம் அமைக்க வேண்டாம் என யாழ்ப்பாணம் ஏழாலை மக்கள் சுற்றுச் சூழல் அதிகார சபை பணிப்பாளருக்கு கடித மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்கள். குறித்த கடிதத்தில் பிரதேசவாசிகள் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தொலைத் தொடர்பு கோபுரம் எமது பிரதேசத்தில் அமைக்க வேண்டாம். ஏழாலை தெற்கு புளியங் கிணற்றடி வீதியில் சன நெருக்கம் அதிகமாக உள்ள இடத்தில் தொலைத் தொடர்பு கோபுரம் அமைப்பதை நாம் விரும்பவில்லை.

கோபுரம் அமைக்கும் செயற்பாடானது எமது பகுதி மக்களின் விருப்பத்திற்கு மாறாக அமைக்கப்பட்டு வருகின்றது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்ற போது அவை சமூக நலன்களை பாதிக்காதவாறு மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதோடு ஒரு சமூகத்தில் இருப்பானது ஆரோக்கியமான சுகாதார வசதிகளிலேயே தங்கியுள்ளது. அப்படி இருக்கும் போது எமது பகுதி மக்களின் சுகாதார நலன்களை பாதிக்கும் வகையில் தூர நோக்கம் இன்றி தொலைத்தொடர்பு கோபுரம் அமைக்கப்படுகின்றமை எமது மக்கள் மீது பாதிய தாக்கத்தை ஏற்படுத்துவதோடு மிகுந்த மன வேதனை ஏற்படுத்துகின்றதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அது மட்டுமின்றி எமது பகுதி சன நெருக்கடி கூடிய பகுதியாகும். இங்குள்ள பெரும்பாலானவர்கள் தொற்று நோய்களுக்கான சிகிச்சைகளை பெற்று வருகிறார்கள், அதுமட்டுமல்லாது 15 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் அதிகமாக வாழ்கிறார்கள். 100 மீட்டர் தூரத்துக்கு 2 ஆலயங்களும் மக்கள் கூடுகின்ற வர்த்தக நிலையங்களும் காணப்படுவதுடன் இரண்டு பால் பண்ணைகளும் இறைச்சி விற்பனை கடைகளும் அமைந்துள்ளன. எனவே எமது கிராம மக்களின் வேண்டுகோளை ஏற்று தொலைத்தொடர்பு கோபுரம் அமைக்கும் பணியை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறும் அவர்கள் கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## இலங்கையில் தமிழர்களிற்கு...

பரப்புரைகளை முன்னெடுத்தல் போன்ற முக்கியமான சேவைகளை அகதிகளிற்கு வழங்கிவருகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதத்துடன் முள்ளிவாய்க்கலில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டு 14 வருடங்களாகின்ற போதிலும் அதற்கு காரணமானவர்கள் எவரும் இதுவரை பொறுப்புக்கூறலிற்கு உட்படுத்தப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்மக்களின் தனிநாட்டிற்கான போராட்டத்திற்கு எதிரான இராணுவநடவடிக்கையின் போது இவர்கள் முள்ளிவாய்க்காலில் சிக்க வைக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர்களில் பலர் இன்னமும் இலங்கை அரசாங்கத்திலும் இராணுவத்திலும் உயர்பதவிகளில் நீடிக்கின்றனர், எனவும் குறிப்பிட்டுள்ள அவர் அவுஸ்திரேலிய கிறீன்ஸ் கட்சியினர் இலங்கையில் தமிழர்களிற்கு எதிராக தொடரும் கட்டமைக்கப்பட்டஇனப்படுகொலையை கண்டிக்கின்றது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்களிற்கு சுயநிர்ணய உரிமைக்குள்ள உள்ள உரிமை பாதுகாப்பு மற்றும் சமாதானத்திற்கு எங்கள் கட்சி ஆதரவளிக்கின்றது எனவும் குறிப்பிட்டுள்ள அவர் அவுஸ்திரேலியாவில் உள்ள ஈழம் தமிழ் அகதிகள் அகதிகள் தொடர்பான தீர்மானங்கள் முடிவுகள் குறித்த தகவல்களை பெறுவதில் கடும் சவால்களை எதிர்கொண்டுள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவில் தமிழ் அகதிகளின் அடைக்கல கோரிக்கைகளே அதிகளவு நிராகரிக்கப்படுகின்றன எனவும் குறிப்பிட்டுள்ள அவர் எங்கள் நாட்டில் உள்ள தமிழர்கள் நாடு கடத்தப்படலாம் என்ற அச்சத்தில் வாழ்கின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.

## போராட்டங்கள் தமிழர்களின்...

வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

"தமிழர்கள், தமிழ்த் தலைவர்கள் தமக்கான உரிமைகளையே கோருகின்றனர். அவர்கள் சிங்களவர்களதோ ஏனைய மக்களதோ உரிமைகளைக் கோரவும் இல்லை பறிக்க நினைக்கவும் இல்லை. இதனைச் சிங்கள மக்கள் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும்.

எல்லாவல மேத்தானந்த தேரர் அண்மையில் ஒரு கருத்தை வெளியிட்டுள்ளார். பிரபாகரன் கேட்டதையே தமிழ்த் தலைவர்கள் கேட்கின்றார்கள் என்பதே அக்கருத்தாகும்.

அறவழியில் - அஹிம்சை வழியில் தந்தை செல்வா கேட்டதும், ஆயுத வழியில் விடுதலைப்புலிகளின் தலைவர் கேட்டதும், தற்போது மீண்டும், அறவழியிலும் இராஜதந்திர வழியிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் ஐயா மற்றும் தமிழ்த் தேசியத் தலைவர்கள் கேட்பதும் தமிழ் மக்களின் உரிமைகளைத்தான். ஏனைய மக்களின் உரிமைகளை ஒருபோதும் தமிழ்த் தலைவர்கள் கேட்கவில்லை என்பதை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அரசியல்வாதியுமான எல்லாவல மேத்தானந்த தேரர் புரிந்துகொள்ள வேண்டும்.

காலாதி காலமாக தாம் வாழுகின்ற வடக்கு - கிழக்கு தாயக பூமியில், சுயநிர்ணய உரிமையுடன் - சுய கௌரவத்துடன் வாழவே தமிழர்கள் விரும்புகின்றார்கள். இதனைப் புரிந்தும் புரியாதவர்கள் போன்று அரசியல் தேவைக்காகச் சிங்கள மக்களை சிங்கள அரசியல் தலைவர்கள் ஏமாற்றி வருகின்றார்கள்.

75 ஆண்டுகளாகத் தமிழ் மக்களை மட்டுமல்லாமல் சிங்கள மக்களையும் சிங்களத் தலைவர்கள் ஏமாற்றி வந்துள்ளார்கள். எல்லாவல மேத்தானந்த தேரரின் மேலுமோர் கருத்தின்படி வடக்கில் தமிழர்களைக் குடியேற்றும் விடயத்தில் கூட தேரர்கள், சிங்கள அரசியல் தலைவர்களின் அனுமதி இருக்க வேண்டும் என்பதாக அமைந்துள்ளது.

அதாவது குருந்தூர் மலையை அண்மித்த 350 இற்கு மேற்பட்ட காணிகளில் தமிழர்களைக் குடியேற்றக் கூடாது என்று ஜனாதிபதியை எச்சரிக்கும் வகையில் எல்லாவல மேத்தானந்த தேரர் தன்னைத்தானே உயர்த்தியுள்ளார்.

தமிழர்களுக்கு என்று பாதுகாப்பு இல்லாத நிலையில் தமிழர்களையும் அவர்களது நிலத்தையும் எதுவும் செய்யலாம் என்ற நிலைமை 2009 இற்குப் பிற்பட்ட சூழல் தோற்றுவித்துள்ளது. இலங்கையின் ஒற்றையாட்சி முறை, சிங்கள - பௌத்த முதன்மை வாதம், ஆளும் கட்சி - எதிர்க்கட்சிகள் முறைமை, பொலிஸ் துறை, படைத்துறை, புலனாய்வுத் துறை, தொல்லியல் துறை என யாவும் சிங்கள மயமாகி இருத்தல் தமிழ் பேசும் மக்களுக்குப் பெரும் ஆபத்தாக மாறியுள்ளது.

இவை தவிர தலையாட்டும் ஆளும் கட்சிசார் தமிழ் அரசியல் பொம்மைகளின் பதவி சுகம், பண சுகம் என்பனவும், சிறு சலுகைக்கு வாக்களிக்கும் மக்களும் சிங்கள பௌத்த மயமாக்கலுக்கும் சிங்கள ஏதேச்சதிகாரத்துக்கும், தமிழர் மீதான ஒடுக்குமுறைக்கும் வழிகோலி வருகின்றனர்.

சிங்கள - பௌத்த மயமாக்கலுக்குப் பதவி மோகம் கொண்ட தமிழ்ப்பொம்மை அரசியல் வாதிகள் மௌனம் காப்பது நக்கண்டு நாவிழந்த கதையாகவுள்ளது." - என்றுள்ளது.

## செஞ்சோலைப் படுகொலைக்கு...

இழப்பின் வலிசுமந்து நிற்கும், உக்ரைன் மக்களுக்காக நாம் பரிதாபப்படுகிறோம்.

சொந்த நாட்டிற்குள்ளேயே இடம்பெயர்தாலும், நாடற்ற மனிதர்களாக ஏதிலிகளாக்கப் படுவதும் எத்தனை கொடியது என்பதை ஈழத் தமிழினம் நன்கு அறியும்

தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கும் மனிதப் பேரவலமொன்றின் விளிம்பு நிலையில் நின்று, ஏதிலிகளாக அந்தரிக்கும் உக்ரைன் மக்களுக்கும் இதே நிலை தொடரக் கூடாது என்பதை உணரத்தலைப்பட்டிருக்கிறோம்.

இதுவரை 6.5 இலட்சம் உக்ரைன் மக்கள் நாட்டிற்குள்ளேயே இடம்பெயர்ந்துள்ளனர். 55 இலட்சம் உக்ரைனியக் குழந்தைகளின் கல்வி அடியோடு பாதிக்கப்பட்டுள்ளனர்.

உக்ரைனிலுள்ள பாடசாலைகளில் ஒரு நாளைக்கு சராசரியாக 22 பாடசாலைகள் தாக்குதலுக்கு உள்ளாகின்றன.

ஒரு கொடிய யுத்தத்திற்குள் நின்று, அந்த யுத்தக் கொடுமைகளின் அத்தனை பக்கங்களையும் அணுவணுவாக அனுபவித்தவன் என்கின்ற வகையில், என்னால் இந்தப் போரையும் அதன் விளைவுகளையும் இலகுவானதாகக் கருதமுடியவில்லை.

ஈழத்தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட இன அழிப்புப் போரின்போது, உக்ரைன் இலங்கை அரசுக்கு தனது பரிபூரண ஆதரவை வழங்கியிருந்தது.

குறிப்பாக 61 மாணவிகளின் உயிரைக் குடித்த, செஞ்சோலைப் படுகொலை உள்ளிட்ட பல விமானத் தாக்குதல்களின் போது, அத்தகையை குண்டுவீச்சு விமானங்களை உக்ரைனியர்களே செலுத்தியிருந்தனர்.

இறுதிப்போரின் இறுதி நாட்களில், பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட இடங்களை நோக்கி,

தமது உயிரைக் காக்கும் ஒரே எண்ணத்தோடு எமது மக்கள் திரண்டிருந்தபோது, அவ்விடங்களில் நடத்தப்பட்ட விமானக் குண்டுத் தாக்குதல்களிலும் உக்ரைனியர்களின் நேரடிப் பங்கிருந்தது.

நாங்கள் ஒரே நடாக ஒற்றுமையாக வாழ வேண்டும் என்று, இந்த உயர்ந்த சபையில் அடிக்கடி கூறிவருகின்ற சகோதர இன நண்பர்கள், ஒரு யுத்தத்தின் கொடுமை எப்படி இருக்கும் என்ற எனது உணர்வை, ஒரு தமிழனின் உணர்வாக மாத்திரம் பார்க்காமல், ஒரு சக மனிதனின் உணர்வாகப் பார்க்க வேண்டும் என்று தயவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

## குருந்தூர் மலை விவகாரம்...

உரையாற்றும் போது கண்டனம் வெளியிட்டுள்ளார். முல்லைத்தீவு குருந்தூர்மலைப் பகுதியில் இருந்து தமிழ் மக்களை பலவந்தமாக வெளியேற்றிவிட்டு, அங்கு சிங்களவர்களை குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

## விடுதலைப்புலிகளின் தலைவரின்...

சட்டத்தின் கீழ் விடுதலைப்புலிகளின் தலைவரின் பிரேத பரிசோதனை அறிக்கையை வழங்குமாறு விண்ணப்பமொன்று முன்வைக்கப்பட்டிருந்தது.

குறித்த விண்ணப்பத்தினை ஊடகவியலாளர் மிதுன் ஜயவர்தன பாதுகாப்பு அமைச்சு, இராணுவ தலைமையகத்திற்கு அனுப்பிவைத்திருந்தார்.

இதற்கமைய, விடுதலைப்புலிகளின் தலைவரின் பிரேத பரிசோதனை அறிக்கையை "தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், இந்த தகவல்களை வழங்கினால் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படும்" என்று இலங்கை இராணுவமும், இலங்கைப் பாதுகாப்பு அமைச்சும் நிராகரித்துள்ளது.

இலங்கை தகவலறியும் ஆணைக்குழுவுக்கு இது தொடர்பில் மேன்முறையீடு செய்துள்ளதாகவும் ஊடகவியலாளர் மிதுன் தெரிவித்துள்ளார்.

## நாட்டை மீட்க சம்பந்தன்,...

நாட்டின் பொருளாதார நெருக்கடி குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

"நிலையானதொரு தேசிய வேலைத்திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உருவாக்கியுள்ளார்.

2048 ஆம் ஆண்டு வரை அந்த வேலைத் திட்டத்துடன் பயணிக்குமாறு ஜனாதிபதி கூறியுள்ளார்.

எனவே, பொருளாதார சமரில் வெல்வதற்கு எமக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தமிழ் முற்போக்குக் கூட்டணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட இந்நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளினதும் ஆதரவு முக்கியமானதொன்றாகும்." என தெரிவித்தார்.

## ஏழை விவசாயிகளது வாழ்வா...

வேண்டுகோள் விடுத்தார்.

பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலகம் தொடர்பான சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த வேண்டுகோளை முன்வைத்தார்.

தோடர்ந்து உரை நிகழ்த்திய பாராளுமன்ற உறுப்பினர் ஜனா,

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கே வரவு செலவுத்திட்டம் மூலமாக ஒதுக்கப்படும் நிதிகள் ஒதுக்கப்படாமல் நாங்கள் எந்தவித அபிவிருத்தி வேலைகளையும் எமது மக்களுக்குச் செய்யமுடியாத சூழ்நிலையில் இருந்து கொண்டு இந்த வரவு செலவுத்திட்ட அலுவலகம் சம்பந்தமான விவாதத்தில் எப்படிப் பங்கு பெறலாம் என்று யோசிக்கின்றேன்.

இருந்தாலும் எனது மாவட்ட மக்கள் சம்பந்தமாக சில விடயங்களையும் இந்த விவாதத்தில் எடுத்துரைக்கலாம் என்று நினைக்கிறேன்.

முதலாவதாக கடந்த 28.05.2023 அன்று மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த தவேந்திரன் மதுசுதன் என்ற 20 வயது மாணவன்இந்தியாவின் தனுஸ்கோடியிலிருந்து தலைமன்னார் வரையான 23 கிலோமீற்றர் கடலை நீந்திக் கடந்திருக்கின்றார்.

ஒரு சாதனை புரிந்திருக்கின்றார். அதுவும் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த மாணவன் கடலில் பிளாஸ்ரிக் கழிவுகள் அதிகரிப்பதனால் ஏற்படும் பின்விளைவுகளையும், பின்விளைவுகளைத் தடுப்பதற்கும் மாணவர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாகா, சிறுவயதில தற்கொலைக்குச் செல்லாத மனோநிலையை வலுப்படுத்த வேண்டும் என்ற குறிக்கோளுடன் சாதனைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற சிந்தனையுடன் செயற்பட்டால் இவ்வாறான விடயங்களிலிருந்து விடுபடலாம் என்ற விழிப்புணர்வுகளுக்காக இந்த சாதனையைப் புரிந்துள்ளார்.

அந்தவகையில் இந்தப் பாராளுமன்றத்தின் ஊடாக அந்த மாணவனுக்கு பாராட்டுக்களைத் தெரிவிக்கவேண்டிய கடமையிலிருக்கின்றேன்.

அது மாத்திரமல்ல இன்றைய விவாதத்தின் ஆரம்பத்திலே 27/2 கேள்வியின் மூலமாக இந்தச் சபையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அவர்கள் ஒரு கூற்றை முன்வைத்திருந்தார். உண்மையிலேயே விவசாயிகள் சார்பாக நான் அவருக்கு பாராட்டுத் தெரிவிக்கிறேன்.

இன்று மட்டக்களப்பு மாவட்டம் மாத்திரமல்ல அம்பாறை போன்ற பிரதேசங்களிலும் நெல் அறுவடை ஆரம்பித்து விட்டது. ஆனால் நெல் சந்தைப்படுத்தல் சபையின் ஊடாக அவர்களுடைய நெல்லை கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகள் எதுவும் நடைபெறவில்லை என்பது மாத்திரமல்லாமல் நெல்லுக்குரிய சரியான விலையைக் கூட இந்த அரசாங்கம் இன்னும் தீர்மானிக்கவில்லை.

இன்றைய 27/2 கீழான கேள்விக்குக் கூட விவசாய அமைச்சர் அவர்கள் சரியான பதிலைக் கூறாமல் தாங்கள் கூடி முடிவெடுத்து அறிவிப்பதாகக் கூறியிருக்கின்றார்.

இன்றைய பொருளாதார நிலைமையில் அரசாங்க விதை உற்பத்திப் பண்ணைகளில் கூட விலை அதிகரிக்கப்பட்டிருக்கிறது. அதாவது ஒரு கிலோ நெல்லை 95 ரூபாவுக்கு விற்ற பண்ணைகள், இன்று ஒரு கிலோ நெல்லை 200 ரூபாவுக்கு விற்கக் கூடிய ஒரு சூழ்நிலையில் இருக்கின்றது. ஏனென்றால் அதற்குரிய உற்பத்திச் செலவு அதிகரித்திருப்பதாகக் கூறுகின்றனர்.

உண்மையில் உற்பத்திச் செலவு அதிகரிப்பதாக இருந்தால் அரசாங்க விதை உற்பத்திகளுக்கு மாத்திரமல்ல ஏழை விவசாயிகளுக்கும் அந்த உற்பத்திச் செலவு அதிகரித்திருக்கின்றது.

கிட்டத்தட்ட ஒரு ஏக்கர் நெல்வயல் செய்கை பண்ணுவதற்கு ஒரு லட்சத்து 25ஆயிரம் ரூபாவுக்கு மேல் செலவு செய்யும் போது இன்றைய நெல்லின் விலை 75- 80ரூபாவுக்கு மேல் தாண்டவில்லை. எனவே இந்த அரசாங்கம் ஆகக்குறைந்தது நெல்லின் விலையை 120ரூபாவுக்காவது நெல் சந்தைப்படுத்தல் சபையின் ஊடாகப் பெற்றுக் கொண்டால் மாத்திரமே அவர்கள் அவர்களுடைய நெருக்கடியிலிருந்து மீள்வார்கள்.

ஒரு கிலோ அரிசி 200 ரூபாவுக்கு விற்கப்படுகின்ற நிலையில். அரிசி ஆலை உரிமையாளர்கள் நெல்லின் விலையை நிர்ணயிக்க முடியாது. அத்துடன் அரிசி ஆலை உரிமையாளர்கள் விலை நிர்ணயத்தில் அழுத்தம் கொடுக்கின்றார்கள். அரசாங்கம், அவர்களது ஆலோசனைகளைக் கருத்தில் கொள்ளாது ஏழை விவசாயிகளின் வாழ்வாதாரத்தினை கவனத்திலெடுக்க வேண்டும் என்பதுடன் அதற்காக பாடுபட வேண்டும்.

அத்துடன் கடந்த சில வாரங்களாக அதிபர் சேவைக்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன. ஆந்த அதிபர் சேவை போட்டிப்பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்படும் போது பல்கலைக்கழகப் பட்டம் அத்துடன் பட்டப்பின் கல்வி டிப்ளோமா இருக்க வேண்டும் அத்துடன் 5 வருட சேவைக்காலமும் இருக்க வேண்டும் அதைவிடுத்து கல்வியியல் கல்லூரி முடித்தவர்களுக்கு 6 வருட சேவை அனுபவம் இருந்தால் அதற்கு விண்ணப்பிக்க முடியும் என்ற சுற்றறிக்கை இருந்தது.

ஆனால் அந்த கல்வி டிப்ளோமா பட்டம், பட்டப்பின் டிப்ளோமா, விஷேட தேவைகள் சார் பட்ட பின் கல்வி டிப்ளோமா பெற்றவர்கள் அந்தப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தாலும் நேர்முகப் பரீட்சையில் அவர்கள் நிராகரிக்கப் பட்டிருக்கின்றார்கள். இது மிகவும் துரதிஸ்டவசமானது. மேலும் திறந்த பல்கலைக்கழக உபவேந்தரினாலும் இது தெட்டத் தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே இது தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுத்து பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு நேர்முகப்பரீட்சை நடாத்தி, அதன் அடிப்படையில் அவர்களையும் இலங்கை அதிபர் சேவைக்கு உள்வாங்குவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

# கல்முனையில் மாட்டிறைச்சி சாப்பிடுவது தொடர்பில் முக்கிய தீர்மானம்!



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் உணவிற்காக மாடுகளை அறுப்பது தொடர்பிலும் எதிர்வரும் ஹஜ் பெருநாளை முன்னிட்டு உழ்ஹிய்யா வழங்குவதற்காக மாடுகளை அறுப்பது தொடர்பிலும் தீர்மானிப்பதற்கான விசேட கலந்துரையாடல் நேற்று 2023.06.20 ஆம் திகதி சுகாதார வைத்திய அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம் றிபாஸ் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் எதிர்வரும் ஹஜ் பெருநாளை முன்னிட்டு ஆடு, மாடுகளை அறுப்பதற்கான விசேட பொறிமுறைகளை வகுத்து செயல்படுவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக சுகாதார வைத்திய அதிகாரிகள் தத்தமது பிரதேசங்களில் மாடுகளுக்கு ஏற்பட்டுள்ள நோய்ப் பரவலின் தன்மை மற்றும் ஏனைய சுகாதார நடைமுறைகளை கவனத்திற் கொண்டு உலமா சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் பங்களிப்புடன் விசேட தீர்மானங்களை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணிப்பாளர் அவர்களினால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதுடன் மாறாக அனுமதி பெறப்படாமல் நோய்வாய்ப்பட்ட மாடுகளை அறுப்பவர்களுக்கு அதிகபட்ச சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நூருல் ஹுதா உமர்

# அகில உலக ரீதியாக திருகோணமலை மாணவிகள் சாதனை..!



அகில உலக ரீதியாக திருகோணமலை மாணவிகள் சாதனை படைத்துள்ளனர்.

Green Tree English Academy மரிய ஜெயந்தா ஆசிரியரின் கற்பித்தலின் கீழ் பயிற்றப்பட்டு London Noisy Class room elj;jpa International Oratory Festival (Zoom மூலம்) போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களில் பிரியங்கா உமாசங்கர் மற்றும் தீப்சிக்கா பிரபாகரன் அகில உலக ரீதியில் 3ம் இடத்தைப் பெற்று Bronze medal வென்று எமது இலங்கை நாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

# யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை இடம்மாற்ற கோரி போராட்டம்!



யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை இடம் மாற்ற கோரி யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் அலுவலகத்திற்கு முன்னால் பெண் ஒருவர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

நேற்றைய தினம் குறித்த போராட்டம் இடம்பெற்றது. யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்து குறித்த பெண் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.




# மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவராக சுற்றாடல் அமைச்சர் பொறியியலாளர் நசீர் அஹமட் நியமனம்.



மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவராக சுற்றாடல் அமைச்சர் பொறியியலாளர் நசீர் அஹமட் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான நியமனக் கடிதத்தை பிரதமர் தினேஷ் குணவர்தனவிடமிருந்து அவர் பெற்றுக் கொண்டார்.

தேசிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு அமைய மாவட்ட மட்டத்தில் அரச நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளால் முன்னெடுக்கப்படும் அனைத்து அபிவிருத்தி செயற்பாடுகளையும் ஒருங்கிணைத்தல், செயற்படுத்தல் மற்றும் கண்காணிப்பது மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் பொறுப்பாகும்.

மேலும், தற்போதைய பொருளாதார பிரச்சினைக்கு மத்தியில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் மாவட்ட மட்டத்தில் பொதுமக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்கு அதிகாரம் பெற்றுள்ளார்.

# பொதுஜன பெரமுன கட்சியை கட்டுப்படுத்துவதற்கு ஜனாதிபதியிடம் இரண்டு கத்திகள் உள்ளன : ஜோதிலிங்கம்!




பொதுஜன பெரமுன கட்சியின் இருப்பு என்பது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கைகளிலேயே தங்கியுள்ளதாக அரசியல் ஆய்வாளரும் சட்டத்தரணியுமான அ.ஜோதிலிங்கம் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

குறிப்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்கட்சிகளிடத்தில் காணப்படுகின்ற முரண்பாடுகளை பயன்படுத்தி கட்சிகளை சின்னாபின்னம் ஆக்குவதில் தொடர்ந்து செயற்படுவதாக அ.ஜோதிலிங்கம் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் பொதுஜன பெரமுன கட்சியின் தலைமைகளுக்கு தற்போது பாரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் அரசாங்கத்துடன் இணைந்துள்ள பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் கட்சி மாறக்கூடிய சந்தர்ப்பம் அதிகமாகவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே ஜனாதிபதியுடன் பொதுஜன பெரமுன முரண்பட்டாலும் ரணிலுக்கு எதிரான தீர்மானங்களை அவர்கள் எடுக்கப்போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் பொதுஜன பெரமுன கட்சியை கட்டுப்படுத்துவதற்கு ஜனாதிபதியிடம் இரண்டு கத்திகள் உள்ளதாகவும்

ஒன்று சர்வதேச போர்க்குற்ற விவகாரம் என்றும் இரண்டாவது நாடாளுமன்றத்தை கலைக்கின்ற அதிகாரம் தற்போது ரணிலிடம் உள்ளதாக அ.ஜோதிலிங்கம் மேலும் தெரிவித்துள்ளார்.

# கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயம்!



ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமானுக்கும், மியாசாகி பாராளுமன்ற உறுப்பினர் ஷிம்பே மட்ஷிதாவுக்குமிடையிலான சந்திப்பின்போது, கிழக்கு மாகாணம் மற்றும் மலையகத்தில் சுற்றுலாத் துறையை ஊக்குவிப்பது குறித்து கலந்துரையாடினார்.

இலங்கையின் நீண்டகால நண்பரான மியாசாகியின் பாராளுமன்ற உறுப்பினர் ஷிம்பே மட்ஷிதாவின் அழைப்பின் பேரில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஜப்பான் பாராளுமன்றத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டார்.

ஜப்பான் பாராளுமன்றத்திற்கு விஜயம் மேற்கொண்ட ஆளுநர் செந்தில் தொண்டமான், இலங்கை மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தல் மற்றும் இருதரப்பு சுற்றுலாத்துறையை ஊக்குவித்தல் குறித்தும் கலந்துரையாடினார்.

ஜப்பானிலுள்ள மியாசாகி கடற்கரைக்கு வருகைதரும் உலாவர்கள் (sufers) ஊடாக இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள உலகத்தரம் வாய்ந்த உலாவல் இடங்களில் (surf spot) ஒன்றாக அருகம்பே கடற்கரையை ஊக்குவிக்க கடற்கரை அதிகாரிகள் தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையையும் ஆளுநர் செந்தில் தொண்டமான் இதன்போது முன்வைத்தார்.

அத்துடன், அருகம்பே போன்ற உலாவல் இடங்களில் (surf spot) சமமான ஆற்றலைக் கொண்ட ஜப்பானின் மியாசாகி கடற்கரையை ஊக்குவிப்பது போல், அருகம்பே கடற்கரையை உள்ளூர் அதிகாரிகளால் சர்வதேச உலாவர்களுக்காக (Surfers) ஊக்குவிக்கப்படும் எனவும் ஷிம்பேய் மட்ஷிதாவிடம் ஆளுநர் கூறினார்.

அருகம்பே கடற்கரையை சர்வதேச உலாவர்களுக்கு (Surfers) ஊக்குவிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாக ஷிம்பேய் மட்ஷிதா ஆளுநரிடம் உறுதியளித்தார்.

மேலும் ஜப்பானிய சுற்றுலாப் பயணிகளுக்காக கிழக்கு மாகாணம் மற்றும் மலையகத்தின் சுற்றுலாத் தளங்களை மேம்படுத்துவது குறித்தும் ஆளுநர் செந்தில் தொண்டமான் கலந்துரையாடினார். அதற்கும் ஷிம்பேய் மட்ஷிதா தனது பூரண ஒத்துழைப்பை வழங்குவதாகவும் உறுதியளித்துள்ளார்.

அபு அலா

தேசியம் www.thesiyamnews.com

# அகில இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் கல்முனைக் கிளையின் வருடாந்த பொதுக்கூட்டம் !





அகில இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் கல்முனைக் கிளையின் வருடாந்த பொதுக்கூட்டம் கல்முனைக் கிளை உப தலைவர் எம்.எஸ். அப்துல் மலிக் தலைமையில் அக்கரைப்பற்றில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதியாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர். எம்.பி. அப்துல் வாஜித் கலந்து கொண்டார். மேலும் பல பிராந்திய பணிமனை பிரிவுத்தலைவர்கள் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பலர் விரைவில் ஓய்வு பெற உள்ளதாக அறிவிக்கப்பட்டு அவர்களின் சேவை மற்றும் அர்ப்பணிப்பைப் பாராட்டி தொழிற்சங்கம் அவர்களுக்கு பாராட்டுச் சின்னமாக நினைவுச் சின்னங்களை வழங்கியது. பொது சுகாதாரத்தில் ஓய்வு பெறும் அதிகாரிகளின் பங்களிப்புகளுக்கு தொழிற்சங்கத்தின் நன்றியை தெரிவித்த அவர்கள் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் எதிர்நோக்கும் பல்வேறு சவால்கள் தொடர்பிலும் இங்கு உரை நிகழ்த்தினர். அதனை தொடர்ந்து நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டட்டது.

நூருல் ஹுதா உமர்

# கானகத்தில் கதிர்காம பாதயாத்திரை காரிகை கரியால் பலி!




கதிர்காம ஆடி வேல்விழா உற்சவத்திற்காக காட்டுப் பாதையில் பாதயாத்திரை சென்ற பெண்ணொருவர் காட்டுயானை தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் பாதயாத்திரை ஆரம்பமாகி இரண்டாம் நாள் (13) நாவலடிக்கு அப்பால் நடுக்காட்டில் இடம் பெற்றுள்ளது.

குறித்த பெண் கதிர்காமத்திலிருந்து சுமார் 45 கிலோமீட்டர் தொலைவில் உள்ள நாவலடி தீர்த்தக் கிணற்று பகுதியால் பயணித்தபோதே காட்டுயானை தாக்குதலுக்கு இலக்காகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண் 63 வயதுடைய மட்டக்களப்பை சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர் .

இதேவேளை சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

காட்டுப் பாதை கடந்த 12ஆம் திகதி திறக்கப்பட்ட நாள் முதல் பத்து நாட்கள் வரை இதுவரை ஆக ஒரேயொரு துர்ச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஏலவே யாழ்ப்பாணம் செல்வச் சந்நதியிலிருந்து யாத்திரையை மேற்கொண்டு வந்த யாத்திரீகர் ஒருவர் மாமாங்கத்தில் திடிரென காலமாகியது தெரிந்ததே.

பறவைக்குளம் மற்றும் கதிரமலை கண்ட இடம் போன்ற இடங்களிலும் காட்டுயானைகளின் தலையீடு இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

வி.ரி. சகாதேவராஜா

# மனித மேம்பாட்டு அமைப்பின் தன்னார்வலருக்கான உத்தியோபூர்வ பொறுப்புச் சான்றிதழ் மற்றும் அடையாள அட்டை வழங்கும் செயற்திட்டம்!!



மனித மேம்பாட்டு அமைப்பின் தன்னார்வலருக்கான உத்தியோபூர்வ பொறுப்புச் சான்றிதழ் மற்றும் அடையாள அட்டை வழங்கும் செயற்திட்டம் அமைப்பின் தலைவர் எஸ். ஏ. முகம்மட் அஸ்லம் தலைமையில் சாய்ந்தமருது கமு /கமு/ அல்-ஹிலால் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளரும் அமைப்பின் தேசிய அமைப்பாளருமான ஐ. எல். எம். இர்பான், மூத்த செய்தி நிருபரும், அமைப்பின் பிரதி தலைவருமான எம். ஐ. சம்சுதீன், அமைப்பினுடைய உயர்பீட உறுப்பினர்கள், பிரதேச அமைப்பாளர்கள், அமைப்பின் கீழ் இயங்கும் பிரிவுகளின் தலைவர்கள் என்று பலர் பங்கேற்றன.

இதன் போது கடந்த காலங்களில் இவ் அமைப்போடு இணைந்து செயற்பட்டு வந்த அமைப்பின் பிரதேச அமைப்பாளர்கள், HDA ஸ்ரீ லங்காவின் கீழ் இயங்கும் பிரிவுகளின் தலைவர்களுக்கு உத்தியோகபூர்வ பொறுப்புச் சான்றிதழ் மற்றும் அடையாள அட்டைகளை அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளர் ஐ. எல். இர்பான் அவர்கள் வழங்கி உத்தியோகபூர்வமாக அமைப்பில் இணைத்துக்கொள்ளப்பட்டதோடு எதிர் கால செயற்திட்டங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டன.

நூருல் ஹுதா உமர்

# சமயக் கடமைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் நிகழ்வுகளை ஒழுங்கு செய்யுமாறு கிழக்கு ஆளுநரிடம் இம்ரான் எம்.பி கோரிக்கை!



கிழக்கு மாகாணத்தில் ஒழுங்கு செய்யப்படும் நிகழ்வுகள் சமயக் கடமைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் இருப்பதை உறுதி செய்துகொள்ளுமாறு திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் கோரிக்கை விடுத்த கடிதமொன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

இதுதொடர்பில் ஆளுநருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டின் ஏனைய மாகாணங்களோடு ஒப்பிடுகையில் கிழக்கு மாகாணத்தில் அதிக முஸ்லிம்கள் வாழ்கின்றனர் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். இந்நிலையில் கிழக்கு மாகாணத்தினால் ஒழுங்கு செய்யப்படும் நிகழ்வுகளை முஸ்லிம்களின் சமயக் கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்தாத வகையில் ஒழுங்கு செய்வது குறித்து கவனம் செலுத்துமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த 2023.06.16 ஆம் திகதி திருகோணமலையில் இடம்பெற்ற கல்விக் கல்லூரி ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கும் வைபவத்தில் தாங்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நியமனக் கடிதம் வழங்கி வைத்துள்ளீர்கள். இது குறித்து நான் மிகவும் சந்தோசமடைகின்றேன்.

எனினும், அன்றைய தினம் வெள்ளிக் கிழமை நாளாகும். முஸ்லிம்கள் ஜும்ஆத் தொழுகைக்கு செல்ல வேண்டிய நாள். அந்த வைபவத்தை ஒழுங்கு செய்தவர்கள் இதனைக் கவனத்தில் கொள்ளாது அந்த நிகழ்வை நீட்டிச் சென்றதால் அந்த நிகழ்வில் கலந்து கொண்ட முஸ்லிம் அதிகாரிகள், நியமனம் பெற்ற ஆசிரியர்கள், அவர்களது பெற்றோர் எனப் பலரும் ஜும்ஆவுக்குச் செல்ல முடியாத நிலையேற்பட்டுள்ளது.

இது குறித்து பலரும் மிகவும் கவலையேடு எனது கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

எனவே, கிழக்கு மாகாணத்தில் எதிர்காலங்களில் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்வுகள் எந்தவொரு சமய கடமைகளுக்கும் இடையூறு ஏற்படாத வகையில் இருப்பதை உறுதி செய்துகொள்ளத் தேவையான அறிவுறுத்தல்களை அனைத்து அதிகாரிகளுக்கும் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அபு அலா

# சட்ட முதுமாணி வை.எல்.எஸ்.ஹமீட் நினைவேந்தல் நிகழ்வு



காலம்சென்ற சட்ட முதுமாணி வை.எல்.எஸ். ஹமீட் தொடர்பான நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை (19) மாலை, கல்முனை அஸ்ஸஹ்றா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

மர்ஹூம் வை.எல்.எஸ்.ஹமீட் ஆங்கில ஆசிரியராக கடமையாற்றிய காலப்பகுதியில் அவரிடம் கல்வி கற்ற மாணவிகள் குழுவொன்றினால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரான சிரேஷ் சட்டத்தரணி ஆரிகா காரியப்பர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நினைவுப் பேருரையை கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர் ஏ.எச்.ஏ.பஷீர் நிகழ்த்தினார்.

அத்துடன் அஸ்ஸஹ்றா வித்தியாலய அதிபர் எம்.எஸ்.எச்.ஆர். மஜீதியா மற்றும் காமிலா காரியப்பர் ஆகியோர் நினைவுக் கவிதை வாசித்தனர். காத்தான்குடி ஸாவியா மகளிர் கல்லூரியின் பிரதி அதிபர் எம்.வை.எம்.இம்ரான், வை.எல்.எஸ்.ஹமீதின் பொது வாழ்க்கைக் குறிப்புகள் மற்றும் சேவைகள் பற்றிய தொகுப்புரையை நிகழ்த்தினார்.

அல்ஹாபிழ் எம்.ஐ.எம்.றியாஸ் மௌலவி விஷேட துஆப் பிரார்த்தனையை மேற்கொண்டார். வை.எல்.எஸ்.ஹமீதின் குடும்பத்தினர் சார்பில் அவரது இளைய சகோதரரான டாக்டர் வை.எல்.எம்.யூசுப் ஏற்புரை நிகழ்த்தினார்.

# சர்வதேச யோகா தினத்தையொட்டி யோகா விழிப்புணர்வு நடைபவனி!




சர்வதேச யோகா தினத்தையொட்டி திருமலை வளாக கிழக்கு பல்கலைக்கழக சித்த மருத்துவபீடத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட யோகா தொடர்பான விழிப்புணர்வு நடைபவனி இன்று (21) இடம்பெறவுள்ளது.

கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் வள்ளிபுரம் கணகசுந்தர் தலைமையில் ஆரம்பமாகவுள்ள இந்த நடைபவனி, நாளை காலை 7.00 மணிக்கு கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்திற்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்டு திருகோணமலை நகரசபைக்கு முன்னால் முடிவடையவுள்ளது.

இந்த விழிப்புணர்வு நடைபவனியில் Prof.Ankuran Dutta - Director, Swami Vivekananda Cultural Center, High Commission of India, Colombo, Prof. (Mrs) Chandravathany.G. Devadasan Rector, Trincomalee Campus, EUSL, Dr. (Mrs) R.Srithar Provincial Commissioner, Department of Indigenous Medicine - Eastern Province, Trincomalee உள்ளிட்ட வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதில் பொதுமக்களும் கலந்துகொள்ளுமாறும் அழைக்கப்பட்டுள்ளனர்.

அபு அலா



அ.கிருபாகரன்
- அதிபர் -

அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை...

# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.



We are a government Approved fully qualified "A" Grade driving school in Sri Lanka.

**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292

| | | |
|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 |
| ஆவரங்கால் 021 222 6688 | சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 |
| பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 | விஸ்வமடு 021 320 1515 |
| மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |








இப்பத்திரிகை அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, மின்னிதழாக வெளியிடப்படுகிறது.